

# 2

# வனம்



படம் பார்த்துக் கலந்துரையாடுவோம்.



**ஆசிரியரின் உதவியுடன் பாடலைச் செவிமடுப்போம்;**

5

பூ பூத்து இருக்குது
பழம் பழுத்துத் தொங்குது
பூக்களிலே தேனீக்கள்
தேன் எடுக்குது.
பழம் பறித்து
குரங்கு கூட்டம்
ருசித்து உண்ணுது.

பட்டம் போல
பறவைக் கூட்டம்
பறந்து செல்லுது.
வனம் முழுதும் வானரங்கள்
பாய்ந்து திரியுது.
பூவும் பழமும் சேர்ந்து நல்ல
வாசம் வீசுது.

வட்ட நிலா மெல்ல மெல்ல
எட்டிப்பார்க்குது.
நட்சத்திரங்கள் கண்ணைக் கண்ணை
சிமிட்டிக் காட்டுது.
காட்டு யானையும்
சிங்கம் புலியும் உலவுகின்றன
அதோ உலவுகின்றன.

## சொல் அறிமுகம்


| | | |
|---|---|---|
| **பூத்து இருக்குது** | - | පිපී තිබෙනවා |
| **பழுத்து** | - | ඉදී |
| **தொங்குது** | - | එල්ලෙයි |
| **தேனீக்கள்** | - | මී මැස්සෝ |
| **தேன்** | - | මී පැණි |
| **எடுக்குது** | - | ගනී |
| **பழம் பறித்த** | - | පලතුරු කැඩූ |
| **குரங்குக் கூட்டம்** | - | වඳුරු රංචුව |
| **ருசித்து** | - | රසකර |
| **உண்ணுது** | - | කයි |
| **பறவைக் கூட்டம்** | - | කුරුලු රෑන |
| **போல** | - | වගේ |
| **வானரங்கள்** | - | වඳුරෝ |
| **திரியுது** | - | එහෙ මෙහෙ ඇවිදියි |
| **வாசம்** | - | සුවඳ |
| **வீசுது** | - | හමයි |
| **நட்சத்திரங்கள்** | - | තරු |
| **சிமிட்டு** | - | ඇසිපිය ගසයි |
| **உலவுகின்றன** | - | එහෙ මෙහෙ ඇවිදියි |




## செயற்பாடு 1

**சோடிகளாக இணைவோம்; படம் பார்ப்போம்; கலந்துரையாடுவோம்; வாசிப்போம்; பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புவோம்.**

பூ, பழங்கள், குரங்குகள், தேனீ, ,இலை, வனம், இலைகள்
நட்சத்திரம், புறாக்கள், பழம், மரம்,



____________ ____________ ____________ ____________






____________ ____________ ____________ ____________









## செயற்பாடு 2

**இடைவெளிகளை நிரப்புவோம்.**

| ஒருமை | பன்மை |
|---|---|
| | பூக்கள் |
| பழம் | |
| குரங்கு | |
| | தேனீக்கள் |
| இலை | |
| | நட்சத்திரங்கள் |
| புறா | |
| | மரங்கள் |

## செயற்பாடு 3

**படங்களைப் பொருத்தமான சொற்களோடு இணைப்போம்.**



கிளிகள்



யானைகள்



குரங்குகள்



மான்கள்



பறவைகள்



கரடி



## செயற்பாடு 4

**(அ) மேலே உள்ள சொற்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புவோம்.**

| -கள் | | -க்கள் | | -ங்கள் | |
|---|---|---|---|---|---|
| **ஒருமை** | **பன்மை** | **ஒருமை** | **பன்மை** | **ஒருமை** | **பன்மை** |
| குரங்கு | குரங்குகள் | பூ | பூக்கள் | நட்சத்திரம் | நட்சத்திரங்கள் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**(ஆ)** ஒருமைச் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி எழுதும்போது ஏற்படும் மாற்றங்களை இனங்காணுவோம்; அவற்றில் கீழ் கோடிடுவோம்.



## செயற்பாடு 5

- சோடிகளாக இணைவோம்.
- A,B பத்திரங்களில் உள்ள ஒருமை, பன்மைச் சொற்களைப் பற்றி நண்பருடன் கலந்துரையாடுவோம்.
- 10 நிமிடத்தில் இடைவெளிகளை நிரப்புவோம், கூறுவோம்.
- முதலில் நிரப்பும் சோடி வெற்றியாளராவீர்.



## (A)

| ஒருமை | பன்மை |
|---|---|
| மேசை | |
| | தலைகள் |
| குடம் | |
| | புத்தகங்கள் |
| அம்மா | |
| | ஈக்கள் |
| பாடம் | |
| | அப்பாமார் |
| | குடைகள் |
| கை | |

## (B)

| ஒருமை | பன்மை |
|---|---|
| | மேசைகள் |
| தலை | |
| | குடங்கள் |
| புத்தகம் | |
| | அம்மாமார் |
| ஈ | |
| | பாடங்கள் |
| அப்பா | |
| குடை | |
| | கைகள் |

## செயற்பாடு 6

**ஆசிரியரின் உதவியுடன் ஓய்வு நேரத்தில் குழுக்களாகப் பாடுவோம்; நடிப்போம்.**

குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே
எங்கே போகிறாய்?
கொத்திக் கொத்தித் தானியத்தைத்
தின்னப் போகிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய்?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
எங்கே போகிறாய்?
ஆலிலையும் கோரைப் புல்லும்
தின்னப் போகிறேன்.

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய்?
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.

## செயற்பாடு 7

**படத்தை அவதானிப்போம்; கலந்துரையாடுவோம்.**





## செயற்பாடு 8

6

**ஆசிரியரின் உதவியுடன் செவிமடுப்போம்; வாசிப்போம்.**

### மிருகக்காட்சிச்சாலையில் ..



சிவா : அதோ மிருகக்காட்சிச்சாலை.
வாருங்கள் போவோம்.

கீதா : சரி, போவோம்.

சிவா : அங்கே கிளிகள் ....!
அவை அழகாகப் பழத்தைக் கொத்திக் கொத்தி
தின்கின்றன.

ஜனனி : சிவா, கீதா ...இங்கே பாருங்கள். ஒரு பெரிய யானை
அசைந்து அசைந்து வருகின்றது.

கீதா : எனக்குப் பயமாக இருக்கின்றது.

சிவா : பயப்பட வேண்டாம். அது ஒன்றும் செய்யாது.

கீதா : இந்தப் பக்கம் குரங்குகள் தாவித் தாவித்
திரிகின்றன. அதோ! அதோ! அது, சிறுவனின்
தொப்பியை எடுக்கின்றது.

ஜனனி : ஐயோ பாவம்..!

சிவா : குகையில் பயங்கரமான சிங்கம் ஒன்று அங்குமிங்கும்
அலைகின்றது.

ஜனனி : அதோ! அதோ! மான்குட்டிகள். அவை துள்ளித்
துள்ளி விளையாடுகின்றன.

கீதா : அதோ எங்கள் ஆசிரியர் வருகின்றார், போவோம்.



## செயற்பாடு 9


**மிருகக்காட்சிச்சாலையில் நண்பர்கள் பார்த்தவற்றை ஒழுங்கு படுத்துவோம்; இலக்கமிடுவோம்.**













## செயற்பாடு 10

பாத்திரமேற்று உரையாடுவோம்.

## செயற்பாடு 11

**ஆசிரியர் வழங்கும் அறிவுறுத்தல்களைச் செவிமடுப்போம்; செய்து காட்டுவோம்.**

- கிளிகள் பழத்தைக் கொத்திக் கொத்தித் தின்கின்றன.
- யானை அசைந்து அசைந்து வருகின்றது.
- சிங்கம் அங்குமிங்கும் அலைகிறது.
- மான்கள் துள்ளித் துள்ளி விளையாடுகின்றன.

## செயற்பாடு 12

**பின்வரும் சொற்களை வாசிப்போம்; வகைப்படுத்தி எழுதுவோம்.**

***முயல், குதிரை, கழுதை, மைனா, ஆமை, கரடி, புறா, புலி, யானை, பசு, நாய், கிளி, பூனை, பன்றி, சிங்கம், மயில், மான், தவளை, முதலை.***

| வீட்டில் | காட்டில் | வீட்டிலும் காட்டிலும் |
|---|---|---|
| | | |

| நீரில் | நிலத்தில் | நீரிலும் நிலத்திலும் |
|---|---|---|
| | | |

## செயற்பாடு 13

**செல்லப் பிராணியைப் பற்றி எழுதுவோம்; நண்பருடன் கலந்துரையாடுவோம்.**


பெயர் - ______________________

நிறம் - ______________________

விருப்பமான உணவு - ______________________

## செயற்பாடு 14

**கண்டுபிடிப்போம்.**




**இடமிருந்து வலம்**

1. காட்டில் வாழும் ஆபத்தான மிருகம்.
2. நீரில் வாழும்.
3. நீரிலும், நிலத்திலும் வாழும்.
4. பச்சை நிறப் பறவை.

**மேலிருந்து கீழ்**

1. தேனை விரும்பி உண்ணும் காட்டு மிருகம்.
2. உருவத்தின் பெரிய மிருகம்.
3. வீட்டிலும், காட்டிலும் வாழும் மிருகம்.
4. சாதுவான மிருகம்.



# செவிமடுப்போம் உச்சரிப்போம்






7

| ச - ස | ச - ච | ச - ජ |
|---|---|---|
| சொற்கள் | பூச்சாடி | குருவிக்குஞ்சு |
| வாசம் | நட்சத்திரம் | இஞ்சி |
| மேசை | காட்சி | மஞ்சள் |
| சிமிட்டி | மிருகக்காட்சிச்சாலை | குஞ்சு |
| ருசித்து | முயற்சி | பஞ்சு |



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍ය |
| 1. க்கள், ங்கள் භාවිත කිරීම | | | |
| 2. සුරතලා ගැන විස්තර කිරීම | | | |
| 3. ச අක්ෂරයේ ස,ජ,ච යන උච්චාරණ වෙනස්කම් හඳුනා ගැනීම | | | |
| 4. සත්තු වත්ත ගැන විස්තර කිරීම | | | |